7

# டால்பின்®

## உன்னால் முடியும்




# சமூக அறிவியல்

புதிய பதிப்பு

Avail

வரைபடப் பயிற்சிப் புத்தகம்

அரசு புதிய பாடத்திட்டத்தின்
படி விடைக் குறிப்பு அடிப்படையில்
தயாரிக்கப்பட்ட சிறப்பு உரைநூல்

டால்பின் பப்ளிகேசன்ஸ்®

# டால்பின்®

## உன்னால் முடியும்

# சமூக அறிவியல்

7

புதிய
பதிப்பு

**அரசு புதிய பாடத்திட்டத்தின் படி விடைக் குறிப்பு அடிப்படையில் தயாரிக்கப்பட்ட சிறப்பு உரைநூல்**

**Avail வரைபடப்
பயிற்சிப் புத்தகம்**

✆ 98653 06197 | 89256 77710 | 99435 67646

**டால்பின் பப்ளிகேசன்ஸ்®**

தரமே எங்களின் தாரக மந்திரம்

239, கீழப்பட்டித்தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர் - 626 125, விருதுநகர் மாவட்டம். த.நா.

Mail us : dolphin.pub2005@gmail.com | Visit us : www.kalvidolphin.com

© All Copyrights reserved

**விலை : ரூ.135**

# பதிப்புரை



**கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு**
**மாடல்ல மற்ற யவை. (400)**

**அன்பு நிறைந்த மாணவச் செல்வங்களுக்கு வணக்கம்...**

நமது டால்பின் பப்ளிகேசன்ஸ் - சமூக அறிவியல் கையேடு உங்களை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் செல்லும் மிக எளிய வழிகாட்டி ஆகும். புதிய பாடத்திட்டத்தின்படி முப்பருவப் பாடத்திட்டத்தினைத் தொகுத்து ஒரே கையேடாக வெளியிட்டு உள்ளோம்.

**சிறப்பம்சங்கள்:**

- மாணவர்களுக்கு நன்கு புரியும் வகையில் எளிய நடையில் விடைகள் அமைந்துள்ளன.
- எளிமையான தெளிவான விடைகள்.
- கற்றல் விளைவுகள், கற்றல் நோக்கங்கள் இடம் பெற்றுள்ளன.
- வரைபடப் பயிற்சிக்கு தனிக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.
- மெல்ல கற்கும் மாணவர்களுக்கு எளிய விடைகள்.

தேர்வில் வெற்றி பெற வாழ்த்துகள்!

நன்றி!!!

**அன்புடன்**
**டால்பின் பப்ளிகேசன்ஸ்**

©

## புத்தகங்களைப் பெறுவதற்கு

**மரியாதைக்குரிய தலைமையாசிரியர்கள் / ஆசிரியைகள் மற்றும் ஆசிரியப் பெருந்தகைகளுக்கு !**

வணக்கம். **டால்பின் பப்ளிகேஷன்ஸ்** நிறுவனத்திற்கு தாங்கள் வழங்கி வருகின்ற பேராதரவிற்கு எங்களின் சிரம்தாழ்ந்த நன்றிகள். நீங்களே எங்களின் வளர்ச்சியின் அடித்தளம். தற்பொழுது தாங்கள் தங்களுக்குத் தேவையான புத்தகங்களைப் பின்வரும் வழிமுறைகளைப் பின்பற்றிப் பெற்றுக்கொள்ளலாம்.

**புத்தகங்களைப் பெற**

அலைபேசி எண் (Mobile No) : **9865306197 / 8925677710 / 9943567646**

கட்செவி எண் (Whatsapp No) : **9345314146**

குறுஞ்செய்தி (Sms) : **9345330937**

வலைதளம் (Website) : **www.kalvidolphin.com**

மின்னஞ்சல் (E-mail ID) : **dolphin.pub2005@gmail.com**

## பணம் செலுத்துவதற்கான விவரங்கள்

**கேட்பு வரைவோலை (D.D.) அல்லது காசோலை (Cheque) :**

டால்பின் பப்ளிகேஷன்ஸ் - ஸ்ரீவில்லிபுத்தூர் **(DOLPHIN PUBLICATIONS, SRIVILLIPUTTUR)** என்ற பெயருக்கு எடுத்து அனுப்பவும்.

## வங்கிக் கணக்கு விவரங்கள்

Karur Vysya Bank
DOLPHIN PUBLICATIONS
SCAN & PAY WITH ANY UPI APP
wlpos.2753796a@kvb
TID: 2753796A
BHIM UPI

ICICI Bank iMobile · BHIM · pockets
Merchant Name: DOLPHIN PUBLICATIONS
Mobile Number : 8668163362
Steps to Pay UPI QR Code
Open UPI app > Select Tap to Pay > Scan QR Code > Enter Amount

G Pay **63743 17883**

CITY UNION BANK
DOLPHIN PUBLICATIONS
MID: E01020101079104
SCAN & PAY
UPI ID:CFST20003166@CUB
328:SRIVILLIPUTHUR
BHIM UPI

### KARUR VYSYA BANK

A/C No : 1804135000006000

IFSC CODE : KVBL0001804

BRANCH : Srivilliputtur

### CITY UNION BANK

A/C No : 328109000204092

IFSC CODE : CIUB0000328

BRANCH : Srivilliputtur

### ICICI BANK

A/C No : 446005500030

IFSC CODE : ICIC0004460

BRANCH : Srivilliputtur

### TAMILNADU MERCANTILE BANK

A/C No : 328150310875103

IFSC CODE : TMBL0000328

BRANCH : Srivilliputtur

**பணம் செலுத்திய பின் கீழ்க்கண்ட தொலைபேசி எண்களில் கண்டிப்பாக தகவல் தெரிவிக்கவும்**

**98653 06197, 89256 77710, 99435 67646**


இந்த உலகத்தையே மாற்றக்
கூடிய சக்தி வாய்ந்த கருவி
கல்வி தான்.
அக்கல்வியை பெற்று சிறப்போடு
வாழ வாழ்த்துகள்..
statusDP

# பாடப் பொருளாக்கம்



| அலகு | பொருளடக்கம் | பக்கம் எண். | மாதம் |
|---|---|---|---|
| | **பருவம் - 1** | | |
| | **வரலாறு** | | |
| 1. | இடைக்கால இந்திய வரலாற்று ஆதாரங்கள் | 2 | ஜுன் |
| 2. | வடஇந்தியப் புதிய அரசுகளின் தோற்றம் | 8 | ஜுலை |
| 3. | தென்னிந்தியப் புதிய அரசுகள்: பிற்காலச் சோழர்களும், பாண்டியர்களும் | 14 | ஆகஸ்ட் |
| 4. | டெல்லி சுல்தானியம் | 20 | ஆகஸ்ட் & செப்டம்பர் |
| | **புவியியல்** | | |
| 1. | புவியின் உள்ளமைப்பு | 25 | ஜுன் |
| 2. | நிலத்தோற்றங்கள் | 32 | ஜுலை |
| 3. | மக்கள் தொகையும், குடியிருப்புகளும் | 38 | ஆகஸ்ட் |
| | **குடிமையியல்** | | |
| 1. | சமத்துவம் | 44 | ஜுன் |
| 2. | அரசியல் கட்சிகள் | 48 | ஆகஸ்ட் |
| | **பொருளியல்** | | |
| 1. | உற்பத்தி | 53 | ஜுலை |
| | தொகுத்தறித் தேர்வு | 58 | |

| அலகு | பொருளடக்கம் | பக்கம் எண். | மாதம் |
|---|---|---|---|
| | பருவம் – 2 | | |
| | வரலாறு | | |
| 1. | விஜயநகர், பாமினி அரசுகள் | 61 | அக்டோபர் |
| 2. | முகலாயப் பேரரசு | 67 | நவம்பர் |
| 3. | மராத்தியர்கள் மற்றும் பேஷ்வாக்களின் எழுச்சி | 73 | நவம்பர் & டிசம்பர் |
| | புவியியல் | | |
| 1. | வளங்கள் | 79 | அக்டோபர் |
| 2. | சுற்றுலா | 85 | நவம்பர் |
| | குடிமையியல் | | |
| 1. | மாநில அரசு | 92 | அக்டோபர் |
| 2. | ஊடகமும் ஜனநாயகமும் | 98 | நவம்பர் |
| | தொகுத்தறித் தேர்வு | 103 | |


| அலகு | பொருளடக்கம் | பக்கம் எண். | மாதம் |
|---|---|---|---|
| | **பருவம் – 3** | | |
| | **வரலாறு** | | |
| 1. | புதிய சமயக் கருத்துக்களும் இயக்கங்களும் | 106 | ஜனவரி |
| 2. | தமிழ்நாட்டில் கலையும் கட்டடக்கலையும் | 111 | பிப்ரவரி |
| 3. | தமிழகத்தில் சமணம், பௌத்தம், ஆசீவகத் தத்துவங்கள் | 117 | மார்ச் |
| | **புவியியல்** | | |
| 1. | கண்டங்களை ஆராய்தல் – வட அமெரிக்கா மற்றும் தென் அமெரிக்கா | 123 | ஜனவரி |
| 2. | நிலவரைபடத்தை கற்றறிதல் | 131 | பிப்ரவரி |
| 3. | இயற்கை இடர்கள் – பேரிடர் மேலாண்மை நடவடிக்கைகளை புரிந்து கொள்ளல் | 138 | மார்ச் |
| | **குடிமையியல்** | | |
| 1. | பெண்கள் மேம்பாடு | 145 | ஜனவரி |
| 2. | சந்தை மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு | 150 | மார்ச் |
| 3. | சாலை பாதுகாப்பு | 155 | ஏப்ரல் |
| | **பொருளியல்** | | |
| 1. | வரி மற்றும் அதன் முக்கியத்துவம் | 161 | ஏப்ரல் |
| | தொகுத்தறித் தேர்வு | 168 | |

# பருவம் - 1

# வரலாறு

## அலகு – 1

# இடைக்கால இந்திய வரலாற்று ஆதாரங்கள்



### கற்றலின் நோக்கங்கள்

- இடைக்கால இந்தியாவின் வரலாற்றுக்கான சான்றுகளை அறிந்துகொள்ளுதல்
- கோவில்கள், மசூதிகள், கல்லறைகள், அரண்மனைகள், கோட்டைகள் ஆகிய முக்கியச் சான்றுகளை அறிதல்
- இலக்கியங்கள், பொறிப்புகள் ஆகியவற்றைப் புரிந்துகொள்ளுதல்
- அரேபிய, துருக்கியப் பயணிகளின் பயண நூல்களை அறிந்துகொள்ளுதல்

CJ6H3

### ✸ கற்றல் விளைவுகள்:

**SS 713 -** வரலாற்றில் பல்வேறு காலங்களைக் கண்டறியப் பயன்படும் ஆதாரங்களின் எடுத்துக்காட்டுதலை அளித்தல்.

**SS 714 -** இடைக்காலத்தில் ஓர் இடத்தில் ஏற்பட்ட முக்கிய வரலாற்று நிகழ்வுகளை மற்றொரு இடத்தில் நிகழ்ந்த நிகழ்வுகளோடு தொடர்புபடுத்துதல்.

# 7th History Lesson - 1



## இடைக்கால இந்தியா வரலாற்று ஆதாரங்கள்


- சான்றுகள்
  - முதல்நிலை
    - பொறிப்புகள், (கல்வெட்டுகள், செப்பு பட்டையங்கள்),
      - பாறைகள், கற்கள், கோயிற்சுவர்கள் உலோகங்கள், ஆகியவற்றின் கடினமான மேற்பரப்பில் மேல் பொறிக்கப்படும் எழுத்துக்கள்
      - சோழ அரசர்களால் வழங்கப்பட்ட நிலக்கொடைகளை கல்வெட்டுகள், செப்பு கட்டயங்கள் மூலம் அறிகிறோம்
    - நினைவுச் சின்னங்கள்,
      - கோவில்கள், அரண்மனைகள், மசூதிகள், கல்லறைகள், கோட்டைகள், கோபுரங்கள், ஸ்தூபிகள்
    - நாணயங்கள்
      - இதில் பொறிக்கப்பட்டுள்ள உருவங்கள், படங்கள், பெயர்கள், பட்டங்கள், நிகழ்வுகள். காலங்கள், சின்னங்கள் பல தகவல்களை தருகின்றன.
  - இரண்டாம் நிலை
    - இலக்கியங்கள்,
      - சமய இலக்கியங்கள்
        - கம்ப இராமயணம், பெரிய புராணம், தேவாரம், திருவாசகம்
      - சமய சார்பற்ற இலக்கியங்கள்
        - மதுரா விஜயம், அமுக்த மால்யதா, பிரிதிவிராஜ ராசோ
    - வாழ்க்கை வரலாற்று நூல்கள், சுய சரிதைகள்
      - தபகத்-இ-நஸிரி, தாஜ்-உல்-மா-அசிர், பாபர்நாமா, அயினி அக்பரி, தசுக்-இ-ஜாஹாங்கீரி
    - பயணக் குறிப்புகள்,
      - மார்க்கோபோலோ, அல் பரூனி, இபன் பதூதா, நிகோலோ கோண்டி, டோமிங்கோ
    - காலவரிசையிலான நிகழ்வுப்பதிவுகள்,






















## பயிற்சிகள்

### I. சரியான விடையைத் தேர்வு செய்க.

1. ___________ என்பவை பாறைகள், கற்கள், கோவில் சுவர்கள், உலோகங்கள் ஆகியவற்றின் கடினமான மேற்பரப்பின் மீது செதுக்கப்படும் வாசகங்களாகும்.

   அ) காலவரிசையிலான நிகழ்வுப்பதிவுகள் ஆ) பயணக்குறிப்புகள்

   இ) நாணயங்கள் ஈ) பொறிப்புகள் [ஈ) பொறிப்புகள்]

---

2. கோவில்களுக்கு கொடையாக வழங்கப்பட்ட நிலங்கள் ___________ ஆகும்.

   அ) வேளாண் வகை ஆ) சாலபோகம் இ) பிரம்மதேயம் ஈ) தேவதானம்

   [ஈ) தேவதானம்]

---

3. ___________ களின் காலம் பக்தி இலக்கியங்களின் காலமென அறியப்படுகிறது.

   அ) சோழர் ஆ) பாண்டியர் இ) ராஜபுத்திரர் ஈ) விஜயநகர அரசர்கள்

   [அ) சோழர்]

---

4. முதல் டெல்லி சுல்தான் பற்றிய தகவல்களைக் கூறும் நூல்___________ ஆகும்.

   அ) அயினி அக்பரி ஆ) தாஜ் – உல் – மா – அசிர்

   இ) தசுக் – இ – ஜாஹாங்கீரி ஈ) தாரிக் – இ – பெரிஷ்டா

   [ஆ) தாஜ் - உல் - மா - அசிர்]

---

5. அரேபியாவில் பிறந்து இந்தியாவிற்கு வந்த மொராக்கோ நாட்டு அறிஞர் ___________ ஆவார்.

   அ) மார்க்கோபோலோ ஆ) அல்–பரூனி இ) டோமிங்கோ பயஸ் ஈ) இபன் பதூதா

   [ஈ) இபன் பதூதா]

---

### II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. ___________ கல்வெட்டு ஒரு பிரம்மதேயக் கிராமத்தின் நிர்வாகம் குறித்து விவரித்துக் கூறுகிறது.

   [உத்திரமேரூர்]

2. தன்னுடைய தங்க நாணயங்கள் மீது பெண் தெய்வமான இலட்சுமியின் உருவத்தைப் பதித்து தன்னுடைய பெயரையும் பொறித்தவர் ___________ ஆவார். [முகமது கோரி]

3. ஒரு ___________ என்பது 3.6 வெள்ளி குன்றி மணிகளைக் கொண்டிருந்தது. [ஜிட்டல்]

4. அடிமை வம்சத்தைச் சேர்ந்த சுல்தான் நஸ்ருதீன் மாமூதுவால் ஆதரிக்கப்பட்டவர் ___________ ஆவார். [மின்கஜ் உஸ் சிராஜ்]

5. கி.பி.1420 இல் விஜயநகருக்கு வருகைபுரிந்த இத்தாலியப் பயணி ___________ ஆவார்.

   [நிகோலோ கோண்டி]

---

## III. பொருத்துக.

| அ | | ஆ | | விடைகள் | |
|---|---|---|---|---|---|
| 1. | கஜுராகோ | அ) | ஒடிசா | இ) | மத்தியப்பிரதேசம் |
| 2. | கொனாரக் | ஆ) | ஹம்பி | அ) | ஒடிசா |
| 3. | தில்வாரா | இ) | மத்தியப்பிரதேசம் | ஈ) | ராஜஸ்தான் |
| 4. | விருப்பாக்சா | ஈ) | ராஜஸ்தான் | ஆ) | ஹம்பி |

## IV. சரியா? தவறா?

1. பள்ளிச்சந்தம் என்பது சமண சமய நிறுவனங்களுக்குக் கொடையாக வழங்கப்பட்ட நிலமாகும். [சரி]
2. நாணயங்களிலுள்ள உலோகங்களின் கலவை பேரரசின் அரசியல் நிலை குறித்த தகவல்களை நமக்கு வழங்குகின்றன. [தவறு]
3. தாமிரத்தின்; விலை அதிகமாக இருந்ததால் அரசு ஆணைகளையும் அரசவை நிகழ்வுகளையும் பதிவு செய்வதற்கு குறைந்த செலவிலான பனையோலைகளும் காகிதமும் பயன்படுத்தப்பட்டன. [சரி]
4. டோமிங்கோ பயஸ் எனும் போர்த்துகீசியப்பயணி கி.பி.1522 இல் சோழப்பேரரசுக்கு வருகை புரிந்தார். [தவறு]

## V. கூற்றைக் காரணத்தோடு பொருத்துக.
## (பொருத்தமான விடையை (✓) டிக் இட்டுக் காட்டவும்.

1. **கூற்று** : முகமதுகோரி தனது தங்க நாணயங்களில் பெண் தெய்வமான இலட்சுமியின் உருவத்தைப் பதிப்பித்தார்.

   **காரணம்** : இத்துருக்கிய படையெடுப்பாளர் மத விசயங்களில் தாராள மனப்பான்மை கொண்டவராய் இருந்தார்.

   அ) காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமே
   ஆ) காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் இல்லை
   இ) கூற்று தவறு, காரணம் சரி ஈ) கூற்று, காரணம் இரண்டுமே தவறு

   **[அ) காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமே]**

2. **தவறான இணையைக் கண்டறியவும்.**

   அ) மதுரா விஜயம் – கங்காதேவி
   ஆ) அபுல் பாசல் – அயினி அக்பரி
   இ) இபன் பதூதா – தாகுயூக்-இ-ஹிந்த்
   ஈ) அமுக்தமால்யதா – கிருஷ்ணதேவராயர்

   **[இ) இபன் பதூதா - தாகுயூக்-இ-ஹிந்த்]**

3. **பொருந்தாததைக் கண்டுபிடி.**

   அ) பொறிப்புகள்
   ஆ) பயணக்குறிப்புகள்
   இ) நினைவுச் சின்னங்கள்
   ஈ) நாணயங்கள்

   **[ஆ) பயணக்குறிப்புகள்]**

## VI. ஓரிரு வாக்கியங்களில் பதில் அளிக்கவும்.

**1. நாலாயிர திவ்விய பிரபந்தத்தைத் தொகுத்தவர் யார்?**

- நாலாயிர திவ்விய பிரபந்தத்தைத் தொகுத்தவர் நாதமுனி.

---

**2. 'தசுக்' எனும் வார்த்தையின் பொருள் யாது?**

- தசுக் எனும் வார்ததையின் பொருள் சுயசரிதை

---

**3. ஜஹாங்கீர் எழுதிய நினைவுக் குறிப்பின் பெயர் என்ன?**

- ஜஹாங்கீர் எழுதிய நினைவுக் குறிப்பின் பெயர் தசுக் – இ – ஜஹாங்கீரி.

---

**4. வரலாற்றை அறிந்துகொள்வதற்கான இருவகைச் சான்றுகளைக் கூறுக.**

- முதல்நிலைச் சான்றுகள் – நினைவுச்சின்னங்கள், நாணயங்கள்
- இரண்டாம் நிலைச் சான்றுகள் – இலக்கியங்கள், சுயசரிதைகள்

---

**5. இடைக்காலத்தில் கட்டப்பட்ட முக்கிய மசூதிகளையும், கோட்டைகளையும் பட்டியலிடவும்.**

- **கோட்டைகள்** – ஆக்ரா கோட்டை, சித்தூர் கோட்டை, குவாலியர் கோட்டை, டெல்லி செங்கோட்டை
- **மசூதிகள்** – குவ்வத் – உல் – இஸ்லாம் மசூதி, மோத் – கி – மசூதி, ஜமா மசூதி, பதேப்பூர் சிக்ரி தர்கா, சார்மினார்.

---

**6. இடைக்காலத்தில் இந்தியாவிற்கு வருகைதந்த முக்கியமான அயல்நாட்டு பயணிகளின் பெயர்களைக் கூறவும்.**

- மார்க்கோ போலோ
- அல் – பரூனி
- இபன் பதூதா
- நிகோலோ கோண்டி
- அப்துர் ரஸாக்
- டோமிங்கோ பயஸ்

---

## VII. கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிக்கவும்.

**1. டெல்லிசுல்தான்கள் அறிமுகம் செய்த பலவகைப்பட்ட நாணயங்களை விவரிக்கவும்.**

- டெல்லி சுல்தான்கள் பலவகையான நாணயங்களை வெளியிட்டனர்.
- ஜிட்டல் எனப்படும் செம்பு நாணயங்களும், டங்கா எனப்படும் வெள்ளி நாணயங்களும் வெளியிடப்பட்டன.
- அலாவுதீன் கில்ஜியின் தங்க நாணயங்கள் நாட்டின் பொருளாதார வளத்தை எடுத்துக்காட்டுகிறது.
- முகமது பின் துக்ளக்கின் செப்பு நாணயங்கள் நாட்டின் ஏழ்மை நிலையைக் காட்டுகின்றன.

---

## VIII. கட்டக வினாக்கள்

| | |
|---|---|
| 1. காஃபி கான் பேரரசர் ஔரங்கசீப்பின் அரசவை அறிஞர் ஆவார். | 2. திருவாலங்காடு செப்பேடுகள் முதலாம் இராஜேந்திர சோழன் காலத்தைச் சேர்ந்ததாகும். |
| 3. சாலபோகம் என்பது கல்விக் கூடங்களைப் பராமரிப்பதற்கான நிலமாகும். | 4. பெரியபுராணத்தைத் தொகுத்தவர் சேக்கிழார் ஆவார். |
| 5. தாரிக் ஓர் அரேபியச் சொல். இதன் பொருள் 'வரலாறு' என்பதாகும். | 6. முகமது பின் துக்ளக் தனது தலைநகரை டெல்லியிலிருந்து தெற்கே அமைந்திருந்த தேவகிரிக்கு மாற்றினார். |

## IX. உயர் சிந்தனை வினா

1. **"நாணயங்களிலுள்ள உலோகங்களின் கலவை பேரரசின் பொருளாதாரச் செழிப்பைச் சுட்டிக்காட்டுகிறது'. விளக்குக.**
   - பழங்கால அரசர்களால் நாணயங்கள் வெளியிடப்பட்டன.
   - நாணயங்களிலுள்ள உலோகங்களின் கலவை தங்கம், வெள்ளி, செம்பு ஆகியவற்றால் ஆனது.
   - உலோகங்களின் மதிப்பானது பேரரசின் பொருளாதாரச் செழிப்பைச் சுட்டிக் காட்டுகின்றது.
   - உண்மையிலே உலோகங்களின் கலவை பேரரசின் பொருளாதாரச் செழிப்பை எடுத்துக் காட்டும் ஓர் அளவுகோல் ஆகும்.

## X. மாணவர் செயல்பாடு (மாணவர்களுக்கானது)

1. **இடைக்கால இந்தியாவின் அரண்மனைகள், கோட்டைகள், மசூதிகள், கல்லறைகள் ஆகியவற்றின் படங்கள் அடங்கிய செருகேடு (ஆல்பம்) ஒன்றைத் தயார் செய்யவும்.**


## XI. வாழ்க்கைத் திறன் (மாணவர்களுக்கானது)

1. **உனது நகரத்தில் அல்லது கிராமத்திலுள்ள நூலகங்களிலிருந்து அங்குக் கிடைக்கும் முதல் நிலை, இரண்டாம் நிலைச் சான்றுகளைக் கண்டறிந்து அறிக்கை ஒன்றைத் தயார் செய்யவும்.**

# புவியியல்

## அலகு – 1

## புவியின் உள்ளமைப்பு



### கற்றலின் நோக்கங்கள்

- ❖ புவியின் உள்ளமைப்பைப் பற்றி விளக்கமாக அறிதல்
- ❖ புவித்தட்டுகளின் இயக்கங்களை கற்றறிதல்
- ❖ நிலநடுக்கம் மற்றும் எரிமலைகள் பற்றி புரிந்து கொள்ளுதல்


VFQ2T

### ✸ கற்றல் விளைவுகள்:

★ இப்பாடப்பகுதிக்கான கற்றல் விளைவுகள் பொருந்தவில்லை.

**SST 701** - புவியின் உள்ளடுக்குகள், பாறை வகைகள் வளிமண்டல அடுக்குகளை வரைபடத்தில் அடையாளம் காணுதல்.


# 7th Geography Lesson - 1




## புவியின் உள்ளமைப்பு


- புவியின் உள்ளமைப்பு
  - புவி மேலோடு
  - கவசம் (Mantle)
  - புவிக் கருவம் (Core)






- புவியின் நகர்வுகள்
  - நிலத்தட்டுகளின் நகர்வுகளே கண்டத்தட்டு நகர்வுகளாகும்







- நிலநடுக்கம்
  - நிலநடுக்கத்திற்கான காரணங்கள்
  - நிலநடுக்கத்தின் விளைவுகள்
  - நிலநடுக்கத்தின் பரவல்




- எரிமலைகள்
  - எரிமலை வெடிப்பிற்கான காரணங்கள்
  - எரிமலை வெடிப்புகளின் தன்மைகள்
  - எரிமலைகளின் வகைகள்
    1. செயல்படும் எரிமலை
    2. உறங்கும் எரிமலை
    3. செயலிழந்த எரிமலை
  - உலக எரிமலை பரவல்
    1. பசிபிக் வளையப் பகுதி
    2. மத்திய கண்டப் பகுதி
    3. மத்திய அட்லாண்டிக் பகுதி.












## பயிற்சிகள்

### I. சரியான விடைத் தேர்வு செய்க.

1. நைஃப் (Nife) ___________ ஆல் உருவானது.
   அ) நிக்கல் மற்றும் ஃபெர்ரஸ் ஆ) சிலிக்கா மற்றும் அலுமினியம்
   இ) சிலிக்கா மற்றும் மெக்னீசியம் ஈ) இரும்பு மற்றும் மெக்னீசியம்
   **[அ) நிக்கல் மற்றும் ஃபெர்ரஸ்]**

2. நில நடுக்கம் மற்றும் எரிமலை வெடிப்பு ___________ விளிம்பின் அருகில் ஏற்படுகின்றது.
   அ) மலை ஆ) சமவெளிகள் இ) தட்டுகள் ஈ) பீடபூமிகள் **[இ) தட்டுகள்]**

3. நில நடுக்கத்தின் ஆற்றல் செறிவின் அளவினை ___________ மூலம் அளக்கலாம்.
   அ) சீஸ்மோகிராஃப் ஆ) ரிக்டர் அளவு கோல்
   இ) அம்மீட்டர் ஈ) ரோட்டா மீட்டர் **[ஆ) ரிக்டர் அளவு கோல்]**

4. பாறைக் குழம்பு வெளியேறும் குறுகலான பிளவு ___________ என்று அழைக்கப்படுகிறது.
   அ) எரிமலைத்துளை ஆ) எரிமலைப் பள்ளம்
   இ) நிலநடுக்க மையம் ஈ) எரிமலை வாய் **[அ) எரிமலைத்துளை]**

5. மத்திய தரைக் கடலின் கலங்கரை விளக்கம் என அழைக்கப்படும் எரிமலை ___________.
   அ) ஸ்ட்ராம்போலி ஆ) கரக்கடோவா இ) பியூஜியாமா ஈ) கிளிமாஞ்சாரோ
   **[அ) ஸ்ட்ராம்போலி]**

6. ___________ பகுதி பெருங்கடல் பகுதி “நெருப்பு வளையம்” என்று அழைக்கப்படுகிறது.
   அ) பசிபிக் ஆ) அட்லாண்டிக்
   இ) ஆர்க்டிக் கண்டம் ஈ) அண்டார்டிக் **[அ) பசிபிக்]**

### II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. புவிக்கருவத்திற்கும் கவசத்திற்கும் இடையே அமையும் எல்லைக்கோடு ___________ என்று அழைக்கப்படுகிறது. **[வெய்சார்ட் குட்டன்பெர்க் என்ற இடைவெளி]**
2. நிலநடுக்க அலைகளைப் பதிவு செய்யும் கருவியின் பெயர் ___________ ஆகும்.
   **[நில அதிர்வு மானி (Seismograph)]**
3. பாறைக் குழம்பு வெளியேறி அது பரவிக்கிடக்கும் பகுதி ___________ என்று அழைக்கப்படுகிறது.
   **[எரிமலை வெளியேற்றம்]**
4. செயல்படும் எரிமலைக்கு உதாரணம் ___________ ஆகும். **[செயின்ட் ஹெலன்]**
5. எரிமலைகளின் அறிவியல் பூர்வமான ஆய்வுகளை___________ என அழைக்கின்றனர்.
   **[எரிமலை ஆய்வியல்]**

## III. பொருந்தாததை வட்டமிடுக.

1. மேலோடு, மாக்மா, புவிக்கருவம், கவசம்
2. நிலநடுக்க மையம், நிலநடுக்க மேல் மையப்புள்ளி, எரிமலைவாய், சிஸ்மிக் அலைகள்
3. உத்தரகாசி, சாமோலி, கொய்னா, கரக்கடோவா
4. லாவா, எரிமலைவாய், சிலிக்கா, எரிமலைப்பள்ளம்
5. ஸ்ட்ராம்போலி, ஹெலென், ஹவாய், பியூஜியாமா

## IV. பொருத்துக.

| அ | | ஆ | | விடைகள் | |
|---|---|---|---|---|---|
| 1. | நிலநடுக்கம் | அ) | ஜப்பானிய சொல் | **இ)** | **திடீர் அதிர்வு** |
| 2. | சிமா | ஆ) | ஆப்பிரிக்கா | **ஈ)** | **சிலிகா மற்றும் மக்னீசியம்** |
| 3. | பசிபிக் நெருப்பு வளையம் | இ) | திடீர் அதிர்வு | **உ)** | **உலக எரிமலைகள்** |
| 4. | சுனாமி | ஈ) | சிலிகா மற்றும் மக்னீசியம் | **அ)** | **ஜப்பானிய சொல்** |
| 5. | கென்யா மலை | உ) | உலக எரிமலைகள் | **ஆ)** | **ஆப்பிரிக்கா** |

## V. கீழே கொடுக்கப்பட்டுள்ள வாக்கியத்தை கருத்தில் கொண்டு சரியானதை (✓) செய்யவும்.

1. **கூற்று** : புவியின் உருவத்தை ஒரு ஆப்பிளோடு ஒப்பிடலாம்.
   **காரணம்** : புவியின் உட்பகுதியானது மேலோடு, மெல்லிய புறத்தோல், புவிக்கருவம் ஆகியவற்றைக் கொண்டது.
   அ) கூற்றும் காரணமும் சரி, கூற்றைக் காரணம் சரியான விளக்குகிறது.
   ஆ) கூற்றும் காரணமும் சரி, ஆனால் கூற்றைக் காரணம் சரியாக விளக்கவில்லை.
   இ) கூற்று சரி, காரணம் தவறு ஈ) கூற்றும் காரணமும் தவறானவை
   **[அ) கூற்றும் காரணமும் சரி, கூற்றைக் காரணம் சரியான விளக்குகிறது.]**

2. **கூற்று** : உலகின் மூன்றில் இரண்டு பங்கு எரிமலைகள் பசிபிக் கடலில் உள்ளன.
   **காரணம்** : பசிபிக்கடலின் மேற்கு மற்றும் கிழக்குக் கடற்கரைப் பகுதியை பசிபிக் நெருப்பு வளையம் என அழைக்கிறோம்.
   அ) கூற்றும் காரணமும் சரி, கூற்றைக் காரணம் சரியாக விளக்குகிறது.
   ஆ) கூற்றும் காரணமும் சரி, ஆனால் கூற்றைக் காரணம் சரியாக விளக்கவில்லை.
   இ) கூற்று தவறு, காரணம் சரி ஈ) கூற்றும் காரணமும் தவறானவை
   **[அ) கூற்றும் காரணமும் சரி, கூற்றைக் காரணம் சரியாக விளக்குகிறது.]**

## VI. ஓரிரு வரிகளில் விடையளிக்கவும்.

1. **புவியின் மேலோட்டின் பெயரை எழுதுக.**
   - புவி மேலோட்டின் பெயர் கிரஸ்ட் (crust)

2. **சியால் (SIAL) என்றால் என்ன?**
   - கண்டங்களின் மேற்பகுதி முக்கிய கனிமக் கூறுகளான சிலிக்கா மற்றும் அலுமினியம் துகள்களால் ஆனது. இது சியால் எனப்படுகிறது.

3. புவிப் பாறைக்கோளத் தட்டின் நகர்வின் பெயர் என்ன?

- புவிப் பாறைக்கோளத் தட்டின் நகர்வின் பெயர் கண்டத்தட்டு நகர்வுகள்.

4. செயலிழந்த எரிமலைக்கு உதாரணம் தருக.

- மியான்மரின் போப்பா
- ஆப்பிரிக்காவின் கிளிமாஞ்சரோ
- கென்யா எரிமலைகள்

## VII. கீழ்க்காண்பனவற்றிற்கு சுருக்கமாக விடையளிக்கவும்.

1. கவச அடுக்கு என்றால் என்ன?

- புவி மேலோட்டின் கீழ் அடுக்கு கவசம் என்றழைக்கப்படுகிறது.

2. புவிக்கருவம் பற்றி சுருக்கமாக எழுதவும்.

- புவியின் மையப்பகுதி புவிக்கருவம் எனப்படும். இது பேரிஸ்பியர் என்றும் அழைக்கப்படுகிறது.
- புவிக்கரு வெளிப்புற புவிக்கரு, உட்புற புவிக்கரு என இரண்டு அடுக்குகளைக் கொண்டது.

3. நிலநடுக்கம் வரையறு.

- புவியின் மேலோட்டின் ஒரு பகுதியில் ஏற்படும். திடீர் நகர்வானது நிலத்தை அதிரவைக்கும் அசைவையும், நடுக்கத்தையும் ஏற்படுத்துவதையே நிலநடுக்கம் என்கிறோம்.

4. சீஸ்மோகிராஃப் என்றால் என்ன?

- புவி அதிர்வு அலைகளை பதிவு செய்யும் கருவி நில அதிர்வு மானி சீஸ்மோகிராஃப் எனப்படுகிறது.

5. எரிமலை என்றால் என்ன?

- புவியின் மேற்பரப்பிலுள்ள பிளவு அல்லது துளை வழியே வெப்பம் மிகுந்த மாக்மா என்னும் பாறைக்குழம்பு வெளியேறுவதையே எரிமலை என்கிறோம்.

6. செயல்படும் அடிப்படையில் மூன்று எரிமலைகளின் பெயர்களை எழுதுக.

- ஹவாய் தீவு – மவுனா லோ எரிமலை
- பிலிப்பைன்ஸ் தீவு – பினாடுபோ எரிமலை
- மத்திய தரைக்கடல் – ஸ்ட்ராம் போலி

## VIII. காரணம் கூறு.

1. புவியின் உட்புறத்திலிருந்து ஒருவருமே மாதிரி எடுக்கவில்லை.

- புவியின் உட்பகுதி மிகுந்த வெப்பமாக காணப்படுவதால் ஒருவருமே மாதிரி எடுக்கவில்லை.
- காரணம் புவியின் உள்ளே செல்லச்செல்ல வெப்பம் அதிகரித்து செல்லும்.

2. கண்டங்களின் மேலோடு கடலின் மேலோட்டை விட அடர்த்தி குறைவு.

- கடல் மேலோடுகள் இலகுவான மற்றும் அடர்ந்த பாறைகளின் கலவையாக இருப்பதால் கண்டங்களின் மேலோட்டை விட அடர்த்தி குறைவு.

## IX. வேறுபடுத்துக.

1. **சியால் மற்றும் சிமா**

| சியால் | சிமா |
|---|---|
| கண்டங்களின் மேற்பகுதி | மேலோட்டின் கீழ்ப்பகுதி |
| சிலிக்கா, அலுமினிய தாதுக்களால் ஆனது | சிலிக்கா, மக்னீசியம் தாதுக்களால் ஆனது |
| அடர்த்தி குறைவு | அடர்த்தி அதிகம் |

2. **செயல்படும் எரிமலை மற்றும் உறங்கும் எரிமலை**

| செயல்படும் எரிமலை | உறங்கும் எரிமலை |
|---|---|
| அடிக்கடி வெடித்து பாறைக்குழம்பை வெளியேற்றுபவை | பல வருடங்களாக எரிமலைக் குழம்பு வெளியேறுவதில்லை. |
| எ.கா: செயிண்ட் ஹெலன், மவுனாலோ, பினாடுபோ | எ.கா: வெசுவியஸ், பியூஜியோமா, கரக்கடோவோ |

## X. பத்தியளவில் விடையளி.

1. **நிலநடுக்கத்தின் விளைவுகள் பற்றி எழுதுக.**
   - நிலநடுக்கங்கள் மலைப்பிரதேசங்களில் நிலச்சரிவுகளை ஏற்படுத்துகின்றன.
   - கட்டடங்கள் இடிந்து விழுவது இவற்றின் முக்கிய விளைவாகும்.
   - நிலத்தடி நீர் அமைப்பு பாதிப்படைகின்றது.
   - கடலோரங்களில் கடல் பேரலைகளை ஏற்படுத்துகிறது.
   - தீப்பற்றுதல் மற்றோர் பாதிப்பாகும்.

2. **எரிமலை வெடிப்பின் அடிப்படையில் அதன் வகைகளை விளக்கு.**

   1. **செயல்படும் எரிமலைகள்**
      - அடிக்கடி வெடித்து வெளியேற்றும் எரிமலைகள்
      - எ.கா: செயிண்ட் ஹெலன், பினாடுபோ, மவுனாலோ
   2. **செயல்படாத எரிமலைகள்**
      - பல வருடங்களாக எரிமலைக் குழம்பு வெளியேறுவதில்லை
      - எ.கா: வெசுவியஸ், பியூஜியாமா, கரக்கடோவா
   3. **செயலிழந்த எரிமலைகள்**
      - வெடிப்பு ஆற்றல் முழுவதையும் இழந்து வெடிப்பதை நிறுத்திவிட்ட எரிமலைகளாகும்.
      - எ.கா: கிளிமஞ்சாரோ, கென்யா எரிமலைகள்

3. **முக்கியமான எரிமலை மண்டலங்களை எழுதி ஏதேனும் ஒன்று பற்றி விவரி.**

   **முக்கியமான எரிமலை மண்டலங்கள்**
   - பசிபிக் வளையப்பகுதி
   - மத்திய கண்டப் பகுதி
   - மத்திய அட்லாண்டிக் பகுதி

**பசுபிக் வளையப் பகுதி**

- இந்த எரிமலைப் பகுதியானது குவிய கடல் தட்டின் எல்லைப் பகுதியில் அமையப்பெற்றது.
- பசிபிக் பெருங்கடலின் கிழக்கு மற்றும் மேற்கு கடலோரப் பகுதிகளில் அமைந்துள்ளது.
- மூன்றில் இரண்டு பங்கு எரிமலைகள் அமைந்திருப்பதால் இதனை பசிபிக் நெருப்பு வளையம் என்றழைக்கப்படுகிறது.

## XI. உயர்சிந்தனை வினாக்கள்


1. **பூமியின் உட்கருவம் மிகவும் வெப்பமானது ஏன்?**
   - புவியின் உட்கருவின் அடர்த்தி 30கி 1 செ.மீ. எனவே பூமியின் உட்கருவம் மிகவும் வெப்பமானதாகக் காணப்படுகிறது.

2. **எரிமலைகள் அழிவானதா அல்லது ஆக்கப்பூர்வமானதா?**
   - எரிமலை வெடிக்கும் பகுதிகள் பெரும் சேதங்களையும், அதே வேளையில் கனிமங்கள் போன்றவற்றை தருவதால் அழிவானதாகவும், ஆக்கப்பூர்வமானதாகவும் இருக்கின்றது.

3. **எரிமலை எவ்வாறு ஒரு தீவை உருவாக்குகிறது.**
   - எரிமலை வெடிப்பின்போது கடல் தரையிலிருந்து மேக்மா வெளிப்படுவதால் தீவுகள் உருவாகின்றன.

## XII. செயல்பாடுகள்

1. **நிலநடுக்கம் மற்றும் எரிமலை பற்றிய படங்களை வைத்து ஒரு படத்தொகுப்பு தயாரிக்கவும்.**
2. **எரிமலையின் பாகங்களைக் குறிக்கவும்.**



# குடிமையியல்

## அலகு – 1

## சமத்துவம்



### கற்றலின் நோக்கங்கள்

- ❖ சமத்துவத்தின் பொருள் பற்றி புரிந்துகொள்ளல்
- ❖ சமத்துவத்தின் முக்கியத்துவத்தை தெரிந்துகொள்ளுதல்
- ❖ சமத்துவத்தின் பல்வேறு வகைகளைப் பற்றி கற்றுக்கொள்ளல்
- ❖ நமது அரசியலமைப்பில் சமத்துவத்தை உறுதி செய்வதற்கான பல்வேறு சட்டப்பிரிவுகளைப் பற்றி தெரிந்துகொள்ளல்.

M21ZW

### ✷ கற்றல் விளைவுகள்:

722 மக்களாட்சியில் சமத்துவத்தின் முக்கியத்துவத்தை விளக்குதல்.

723 அரசியல் சமத்துவம், பொருளாதார சமத்துவம் மற்றும் சமூக சமத்துவத்தினை வேறுபடுத்துதல்.

724 ஒருவர் வாழும் பகுதிகளில் காணப்படும் சமத்துவ உரிமை: தொடர்பான சமூக அரசியல் பொருளாதாரம் சார்ந்த பிரச்சினைகளைக் கண்டறிந்து பொருளுணர்தல்.

# 7th Civics Lesson - 1

# சமத்துவம்





**சமத்துவம் என்றால் என்ன?**

ஒரு தனி மனிதன் அல்லது ஒரு குழு வேறுபாடு காட்டி நடத்தப்படாமல் இருத்தல்

**சமத்துவத்தின் முக்கியத்துவம்**




**சமூக சமத்துவம்**

சாதி, சமயக்கொள்கை, நிறம் மற்றும் இனம் ஆகியவற்றின் அடிப்படையில் பாகுபாடு இருத்தல் கூடாது.

**குடிமை சமத்துவம்**

குடிமக்களிடையே உயர்ந்தோர், தாழ்ந்தோர்; ஏழை, பணக்காரர், சாதி மற்றும் சமயக்கொள்கை ஆகியவை காரணமாக பாகுபாடு இருத்தல் கூடாது.




**சமத்துவத்தின் வகைகள்**

**அரசியல் சமத்துவம்**

வாக்களிக்கும் உரிமை
பொது அலுவலகத்தில் பங்குகொள்ளும் உரிமை
அரசை விமர்சனம் செய்யும் உரிமை

**பாலின சமத்துவம்**

ஆண் பெண் இருவரும் வாய்ப்புகள் மற்றும் வளங்களை பெறுதல்





**மனித மாண்பு**

சுய மரியாதை
வாய்ப்பு மற்றும் கல்வியில் சமத்துவம்

**இந்திய அரசியலமைப்பில் சமத்துவம்**

அரசியலமைப்பு சட்டப்பிரிவுகள் 14–18 மூலம் சமத்துவத்தை அளிக்கிறது




**சமத்துவத்தை மேம்படுத்தும் வழிகள்**

அனைவரையும் நியாயமாக நடத்துதல்
அனைவரையும் உள்ளடக்கிய ஒரு பண்பாட்டினை உருவாக்குதல்
அனைவரும் வாய்ப்புகள் பெறுவதை உறுதிப்படுத்துதல்






## பயிற்சி

### I. சரியான விடையைத் தேர்வு செய்க.

1. **பின்வருவனவற்றுள் எது சமத்துவத்தின் கீழ் வருவதில்லை?**
அ) பிறப்பு, சாதி, மதம், இனம், நிறம், பாலினம் அடிப்படையில் பாகுபாடு இன்மை
ஆ) தேர்தலில் போட்டியிடும் உரிமை
இ) அனைவரும் சட்டத்தின் முன் சமமாக நடத்தப்படுதல்
ஈ) பணக்காரர்கள் மற்றும் ஏழைகள் இடையில் சமத்துவமின்மையைக் காட்டுதல்
**[ஈ) பணக்காரர்கள் மற்றும் ஏழைகள் இடையில் சமத்துவமின்மையைக் காட்டுதல்]**

2. **கீழ்க்கண்டவைகளில் எது அரசியல் சமத்துவம் ஆகும்?**
அ) அரசாங்கத்திற்கு மனு செய்வது மற்றும் பொதுக் கொள்கைகளை விமர்சிப்பது
ஆ) இனம், நிறம், பாலினம் மற்றும் சாதி அடிப்படையில் சமத்துவமின்மை அகற்றப்படுதல்
இ) சட்டத்தின் முன் அனைவரும் சமம் ஈ) சட்டத்தின் கைகளில் செல்வம் குவிவதைத் தடுத்தல்
**[அ) அரசாங்கத்திற்கு மனு செய்வது மற்றும் பொதுக் கொள்கைகளை விமர்சிப்பது]**

3. **இந்தியாவில் உள்ள அனைத்து குடிமக்களுக்கும் வாக்களிக்கும் உரிமை வழங்கப்படும் வயது __________.**
அ) 21 ஆ) 18 இ) 25 ஈ) 31 **[ஆ) 18]**

4. **சாதி, பணம், மதம் ஆகியவற்றின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட சமத்துவமின்மை**
அ) இயற்கை சமத்துவமின்மை ஆ) மனிதனால் உருவாக்கப்பட்ட சமத்துவமின்மை
இ) பொருளாதார சமத்துவமின்மை ஈ) பாலின சமத்துவமின்மை
**[ஆ) மனிதனால் உருவாக்கப்பட்ட சமத்துவமின்மை]**

5. **சுவிட்சர்லாந்தில், பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட்ட ஆண்டு**
அ) 1981 ஆ) 1971 இ) 1991 ஈ) 1961 **[ஆ) 1971]**

### II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. குடிமை சமத்துவம் __________ க்கு முன்பு அனைவரும் சமம் என்பதைக் குறிக்கிறது. **[சட்டத்து]**
2. __________ முதல் __________ வரையிலான இந்திய அரசியலமைப்புச் சட்ட பிரிவுகள் சமத்துவ உரிமையைப் பற்றி குறிப்பிடுகின்றன. **[14, 18]**
3. தேர்தலில் போட்டியிடும் உரிமை என்பது __________ உரிமை ஆகும். **[அரசியல்]**
4. சமத்துவம் என்பது முதலாவதாக __________ இல்லாததாகும். **[சமூக சிறப்புரிமை]**

### III. குறுகிய விடையளி.

1. **சமத்துவம் என்றால் என்ன?**
   - சமத்துவம் என்பது ஒரு தனிமனிதன் அல்லது ஒரு குழு வேறுபாடு காட்டி நடத்தப்படாமல் இருப்பது ஆகும்.

2. **பாலின சமத்துவம் ஏன் தேவையானது?**
   - ஆண், பெண் இருவரும் சமமான உரிமைகள் பெறுவதற்கு பாலின சமத்துவம் தேவையானது ஆகும்.
   - இவர்கள் இருவரையும் ஒன்று போல் நடத்தப்பட வேண்டுடம் என யூனிசெப் நிறுவனம் கூறுகிறது.

3. குடிமை சமத்துவம் என்றால் என்ன?
   - அனைத்து குடிமக்களும் குடியியல் உரிமைகளை அடைதல் வேண்டும் என்பதே குடிமை சமத்துவம் ஆகும்.

## IV. விரிவான விடையளி.

1. சமத்துவத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி எழுதுக.
   - சமத்துவம் பல நூற்றாண்டுகளாக மனித சமூகத்தை ஊக்குவித்து வழி நடத்திய ஆற்றல் வாய்ந்த நீதி மற்றும் அரசியல் கோட்பாடாகும்.
   - சமத்துவம் என்ற கோட்பாடு மனித இனம் அதனுடைய சாதி, நிறம், பாலினம், இனம் அல்லது தேசியம் ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் அனைத்து மனிதர்களும் சமமான மதிப்புள்ளவர்கள் என்ற கோட்பாட்டை வலியுறுத்துகிறது.
   - மக்களாட்சிக் கோட்பாடுகளான சுதந்திரம், சமத்துவம் ஆகியவை நீதியின் அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்படும் போது மட்டுமே பொருள்படும்.

2. அரசியல் சமத்துவம் என்றால் என்ன?
   - அரசியல் சமத்துவம் என்பது இந்தியா உள்ளிட்ட அனைத்து மக்களாட்சி நாடுகளும் அவற்றின் குடிமக்களுக்கு அரசியல் உரிமைகளை உறுதியளிக்கின்றன. அவை
     1. வாக்களிக்கும் உரிமை
     2. பொது அலுவலகத்தில் பங்கு கொள்ளும் உரிமை
     3. அரசை விமர்சனம் செய்யும் உரிமை

3. இந்திய அரசியலமைப்பு சட்டம் சமத்துவத்திற்கான உரிமையை எவ்வாறு பாதுகாக்கிறது?
   - இந்திய அரசியலமைப்பு அதன் குடிமக்களுக்கு அரசியலமைப்பு சட்டப்பிரிவுகள் 14-18 மூலம் சமத்துவத்தை அளிக்கிறது.
   - சட்டப்பிரிவு 14 - சட்டத்தின் முன் அனைவரும் சமம்
   - சட்டப்பிரிவு 15 - பாகுபாட்டை தடை செய்கிறது
   - சட்டப்பிரிவு 16 - பொது வேலைவாய்ப்பில் அனைவருக்கும் சம வாய்ப்பு அளிக்கிறது
   - சட்டப்பிரிவு 17 - தீண்டாமையை ஒழிக்கிறது
   - சட்டப்பிரிவு 18 - பட்டங்கள் அளித்து வேறுபடுத்துதலை தடை செய்கிறது

## V. உயர்சிந்தனை வினா

1. பள்ளிகளில் சமத்துவமின்மையை நாம் எவ்வாறு அகற்ற முடியும்?
   - வகுப்பறையில் எல்லோருக்கும் ஒரே கல்வி, இருக்கை வசதி, விளையாட்டு போட்டிகளில் பங்கேற்கும் வசதி, சீருடை, சுகாதார வசதி அமைத்துக் கொடுப்பது சமத்துவமின்மையை அகற்றும்.


## VI. வாழ்வியல் திறன்

| வ. எண். | சமத்துவத்தின் வகைகள் பற்றி அறிதல் | எந்த சமத்துவ வகையைச் சார்ந்தது |
|---|---|---|
| 1. | தகுதி, சாதி, நிறம் மதம் மற்றும் தரம் ஆகியவற்றின் அடிப்படையில் குடிமக்கள் மத்தியில் எந்த பாகுபாடுகளும் இருக்கக் கூடாது. | சமூக சமத்துவம் |
| 2. | சட்டத்திற்கு முன் அனைவரும் சமம். | குடிமை சமத்துவம் |
| 3. | வாக்களிப்பதற்கான உரிமை, அரசாங்க அலுவலகத்தில் பணியாற்றும் உரிமை, அரசாங்கத்தை விமர்சிக்கும் உரிமை. | அரசியல் சமத்துவம் |
| 4. | எந்த விதத்திலும் ஆணுக்கு குறைவாக என் திறமை இல்லை. | பாலின சமத்துவம் |

# பொருளியல்

## அலகு – 1

# உற்பத்தி



### கற்றலின் நோக்கங்கள்

- ❖ உற்பத்தி என்பதன் பொருளறிதல்
- ❖ உற்பத்தி வகைகளை அறிந்துகொள்ளுதல்
- ❖ உற்பத்திக்கான காரணிகளைத் தெரிந்துகொள்ளுதல்
- ❖ உற்பத்திக்கான காரணிகளின் சிறப்பியல்புகளைப் புரிந்துகொள்ளுதல்

58271

### ✷ கற்றல் விளைவுகள்:

**1004** பொருளாதார வளர்ச்சியுடன் தொடர்புடைய அடிப்படை பொருளாதார சொற்களான மனித மூலதனம், நிலையான வளர்ச்சி, மொத்த உள்நாட்டு உற்பத்தி, மொத்த மதிப்பு கூடுதல், தனிநபர் வருமானம், மனித வள மேம்பாட்டுக் குறியீடு, பன்னாட்டு நிறுவனம், வெளிநாட்டு வர்த்தகம், தாராளமயமாக்கல் மற்றும் வெளிநாட்டு முதலீடு போன்றவற்றை வரையறுத்தல்.


7th Economics Lesson - 1
உற்பத்தி
பொருள் விளக்கம்
உற்பத்தியின் வகைகள்
முதன்மை நிலை உற்பத்தி
வேளாண்மை, காடுவளர்ப்பு, மீன் பிடித்தல், சுரங்கத்தொழில்
PRIMARY SECTOR
rimary
ıdustry
Secondary Industry
civilspedia.com
Tertiary Industry
இரண்டாம் நிலை உற்பத்தி
நான்கு சக்கர வாகனங்கள், ஆயத்த ஆடைகள், இரசாயனப் பொருள்கள், பொறியியல் மற்றும் கட்டுமானப் பணிகள்
SECONDARY SECTOR: INDUSTRY, ENERGY AND MINING.
மூன்றாம் நிலை உற்பத்தி
வங்கி, காப்பீடு, கல்வி, மற்றும் பாதுகாப்பு
THE TERTIARY SECTOR
உற்பத்திக்கான காரணிகள்
முதன்மை உற்பத்திக் காரணிகள்
நிலம்
நிலத்தின் 7 சிறப்பியல்புகள்
உழைப்பு
உழைப்பின் 6 சிறப்பியல்புகள்
வேலை பகுப்பு முறை நன்மைகள் தீமைகள்
பெறப்பட்ட அல்லது இரண்டாம் நிலை அல்லது நவீன உற்பத்திக் காரணிகள்
மூலதனம்
மூலதனத்தின் வடிவங்கள்
மூலதனத்தின் சிறப்பியல்புகள்
தொழிலமைப்பு
The Top Methods to Increase Productivity in the Workplace
7 Most Common Causes of Low Productivity
தொழில் முனைவோர் (அல்லது) தொழிலமைப்பு
தொழில் முனைவோரின் சிறப்பியல்புகள்
ENTREPRENEURSHIP
VISION
RESEARCH
BRAINSTORM
STRATEGY
GOALS
START UP
IDEA
PLAN
ACTION



## பயிற்சி

### I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.

1. உற்பத்தி என்பது
அ) பயன்பாட்டை அழித்தல் ஆ) பயன்பாட்டை உருவாக்குதல்
இ) மாற்று மதிப்பு ஈ) மேற்கண்ட எதுவுமில்லை
**[ஆ) பயன்பாட்டை உருவாக்குதல்]**

2. பயன்பாட்டின் வகைகளாவன
அ) வடிவப் பயனப்பாடு ஆ) காலப் பயன்பாடு இ) இடப் பயன்பாடு ஈ) மேற்கண்ட அனைத்தும்
**[ஈ) மேற்கண்ட அனைத்தும்]**

3. முதன்மைக் காரணிகள் என்பன ___________
அ) நிலம், மூலதனம் ஆ) மூலதனம், உழைப்பு
இ) நிலம், உழைப்பு ஈ) எதுவுமில்லை **[ஆ) மூலதனம், உழைப்பு]**

4. தொழில் முனைவோர் என அழைக்கப்படுபவர்
அ) பரிமாற்றம் செய்பவர் ஆ) முகவர் இ) அமைப்பாளர் ஈ) தொடர்பாளர்
**[இ) அமைப்பாளர்]**

### II. கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. ___________ என்பது பண்டத்திற்கான விருப்பங்களை நிறைவு செய்யும் சக்தியாகும். **[பயன்பாடு]**
2. பெறப்பட்ட காரணிகள் என்பது ___________ மற்றும் ___________ ஆகும். **[முதலீடு, அமைப்பு]**
3. ___________ என்பது நிலையான அளிப்பினை உடையது. **[நிலம்]**
4. ___________ என்பது மனித உற்பத்தியில் ஓர் இடு பொருள். **[உழைப்பு]**
5. ___________ என்பது பல்வேறு பண்டங்களை உற்பத்தி செய்திட மனித முயற்சியால் உருவாக்கப்பட்டதாகும். **[மூலதனம்]**

### III. பொருத்துக.

| I | | II | | விடைகள் | |
|---|---|---|---|---|---|
| 1. | முதன்மை உற்பத்தி | அ) | ஆடம் ஸ்மித் | **ஆ)** | **மீன்பிடித்தல், சுரங்கத்தொழில்** |
| 2. | காலப் பயன்பாடு | ஆ) | மீன்பிடித்தல், சுரங்கத்தொழில் | **ஈ)** | **எதிர்கால சேமிப்பு** |
| 3. | நாடுகளின் செல்வம் | இ) | தொழில் முனைவோர் | **அ)** | **ஆடம் ஸ்மித்** |
| 4. | மனித மூலதனம் | ஈ) | எதிர்கால சேமிப்பு | **உ)** | **கல்வி, உடல்நலம்** |
| 5. | புதுமை புனைபவர் | உ) | கல்வி, உடல்நலம் | **இ)** | **தொழில் முனைவோர்** |

### IV. குறுகிய விடையளி.

1. **உற்பத்தி என்றால் என்ன?**
   - நுகர்வோரின் பயன்பாட்டுக்காக மூலப்பொருளையும் மூலப்பொருள் அல்லாதவற்றையும் ஒன்றிணைத்து ஒரு பொருளை உருவாக்கும் செயலே உற்பத்தியாகும்.

2. **பயன்பாடு என்றால் என்ன?**
   - பயன்பாடு என்பது நமது தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவு செய்வதாகும்.

3. **பயன்பாட்டின் வகைகளை எழுதுக.**
   - வடிவப் பயன்பாடு
   - இடப்பயன்பாடு
   - காலப் பயன்பாடு

4. **உற்பத்திக் காரணிகளைக் கூறுக.**
   - நிலம்
   - முதலீடு
   - உழைப்பு
   - தொழில் முனைவோர்

5. **உழைப்பு வரையறு.**
   - வேலையினால் ஏற்படும் துன்பத்தைக் கருதாமல் கைமாறு எதிர்பார்த்து முழுமையாகவோ, பகுதியாகவோ உடல் அல்லது மனதால் பயன்கருதி மேற்கொள்ளும் முயற்சியே உழைப்பாகும்.

6. **வேலை பகுப்பு முறை வரையறு.**
   - ஒரு உற்பத்தியை நன்கு வரையறுக்கப்பட்ட வெவ்வேறு உட்பிரிவுகளாகப் பிரித்து அந்த உட்பிரிவுகள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு தனிப்பட்ட உழைப்பாளி அல்லது உழைப்பாளர் குழுவினரிடம் ஒப்படைத்தலே வேலை பகுப்புமுறை எனப்படும்.

7. **மூலதனத்தின் வடிவங்கள் யாவை?**
   - பருமப்பொருள் அல்லது பொருள்சார் மூலதனம்
   - பண மூலதனம் அல்லது பணவியல் வளங்கள்
   - மனித மூலதனம் அல்லது மனிதத் திறன் வளங்கள்

8. **தொழில் முனைவோரின் பண்புகள் மூன்றினைக் கூறுக.**
   - இலாபகரமான முதலீட்டு வாய்ப்புகளை அடையாளம் காணுதல்
   - புதுமைகளை உருவாக்குதல்
   - இடர்களை ஏற்றல்

## V. விரிவான விடையளி.

1. **உற்பத்தியின் வகைகளை விரிவாக எழுதுக.**

   **உற்பத்தி மூன்று வகைப்படும்.**
   - முதன்மை நிலை உற்பத்தி: இயற்கையாகக் கிடைக்கும் பொருள்களை நேரடியாகப் பயன்படுத்தச் செய்கின்ற நிகழ்வுகள் முதன்மைநிலை உற்பத்தி எனப்படும்.
   - எ.கா: வேளாண்மை, மீன்பிடித்தல்
   - இரண்டாம் நிலை உற்பத்தி: முதன்மை நிலையின் உற்பத்திப் பொருட்களை மூலப்பொருள்களாகப் பயன்படுத்திப் புதிய உற்பத்திப் பொருளாக உருவாக்கும் செயல்பாடாகும்.
   - எ.கா: பொறியியல் துறை சார்ந்த பணிகள்
   - மூன்றாம் நிலை உற்பத்தி: முதன்மை நிலை, இரண்டாம் நிலைகளின் உற்பத்திப் பொருள்களைச் சேகரிப்பதும் பரிமாற்றம் செய்வதும் மூன்றாம் நிலை உற்பத்தியாகும்.
   - எ.கா: வாணிகம், வங்கி, போக்குவரத்து

**2. நிலம் என்றால் என்ன? அதன் சிறப்பியல்புகளை விவரி.**

- நிலம் என்பது உற்பத்திக் காரணி, இயற்கை வளங்கள் அனைத்தையும் அல்லது இயற்கை மனிதனுக்கு இலவசமாகக் கொடுத்திருக்கும் கொடை அனைத்தையும் குறிக்கிறது.

**சிறப்பியல்புகள்:**

- நிலம் இயற்கையின் கொடை
- நிலத்தின் அளிப்பு நிலையானது
- நிலம் அழிவில்லாதது
- இது முதன்மை உற்பத்திக் காரணி
- நிலம் இடம் பெயரக் கூடியதன்று
- நிலம் ஆற்றல் வாய்ந்தது
- நிலம் அதன் செழிப்புத் தன்மையில் மாறுபடும்

---

**3. வேலை பகுப்பு முறையின் நன்மைகள் மற்றும் தீமைகளை எழுதுக.**

**நன்மைகள்:**

- உழைப்பாளி ஒருவர் ஒரே வேலையை மீண்டும் மீண்டும் செய்வதால் அந்த வேலையில் திறமையுடையவராக ஆகிறார்.
- இம்முறை நவீன இயந்திரங்களை உற்பத்தியில் அதிகமாக ஈடுபடுவதற்கு வழிவகுக்கிறது.
- காலமும் மூலப்பொருட்களும் மிகத் திறமையாகப் பயன்படுகின்றன.

**தீமைகள்:**

- தொழிலாளி ஒரே வேலையைத் திரும்ப திரும்ப செய்வதால் சுவையற்ற, களிப்பற்ற தன்மையை அடைகிறார்.
- ஒரு தொழிலாளி ஒரு பொருளினை முழுவதுமாக உருவாக்கிய மனநிறைவினைப் பெறுவதில்லை.

---

**4. மூலதனத்தின் சிறப்பியல்புகளை விளக்குக.**

- மூலதனம் செயலற்ற ஓர் உற்பத்திக் காரணி
- மனித முயற்சியால் உருவாக்கப்பட்டது
- இது உற்பத்தியில் தவிர்க்க முடியாத காரணியல்ல. இது இல்லாமலும் உற்பத்தி நடைபெறும்.
- மூலதனம் அதிகம் இயங்கும் தன்மையுடையது
- இதன் அளிப்பு நெகிழுந்தன்மையுடையது
- மூலதனம் ஆக்கமுடையது
- மூலதனம் பல ஆண்டுகள் நீடிக்கும்

---

## VI. செயல் திட்டம் (மாணவர்களுக்கானது)

1. **மாணவர்களை முதன்மை, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை உற்பத்தித் தொடர்புடைய மாதிரிப் படங்களைச் சேகரித்து வரச் செய்து, ஒட்டச்செய்தல்**
2. **மாணவர்களைத் தங்கள் வீட்டின் அருகிலுள்ள வேளாண்மை செய்யும் விவசாயிகளுடன் கலந்துரையாடி நிலம் மற்றும் அதன் தொடர்புடையவற்றை புகைப்படங்கள் எடுத்துத் தாளில் ஒட்டச் செய்தல்**

---

## VII. வாழ்வியல் திறன்கள் (மாணவர்களுக்கானது)

1. **மாணவர்கள் தொழில் முனைவோர் பற்றி அறிந்துகொள்ள வகுப்பறையை ஒரு நிறுவனம் போல் அமைத்தல். மாணவர்கள் சிலரைத் தொழில் முனைவோர் போலவும் உற்பத்தி நடவடிக்கையில் ஈடுபடுவது போலவும் நடிக்கச் செய்தல். ஆசிரியரும், மாணவர்களும் சமூதாய முன்னேற்றத்திற்குத் தொழில் முனைவோரின் பங்கு பற்றிக் கலந்துரையாடுதல்.**

## விருதுநகர் மாவட்டம்

## தொகுத்தறித் தேர்வு - செப்டம்பர் 2024

**கால அளவு : 2.00 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 60**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 5x1=5**

1. ...........களின் காலம் பக்தி இலக்கியங்களின் காலமென அறியப்படுகிறது.
   அ) சோழர் ஆ) பாண்டியர் இ) இராஜபுத்திரர் ஈ) விஜயநகர அரசர்கள்
2. சோழர்களின் கட்டடக்கலைக்கான எடுத்துக்காட்டை எங்கு காணலாம்?
   அ) கண்ணாயிரம் ஆ) உறையூர் இ) காஞ்சிபுரம் ஈ) தஞ்சாவூர்
3. .......... பகுதி ‘பசிபிக் நெருப்பு வளையம்’ என்று அழைக்கப்படுகிறது.
   அ) பசிபிக் வளையம் ஆ) மத்திய அட்லாண்டிக்
   இ) மத்திய கண்டம் ஈ) அண்டார்டிக்
4. இந்தியாவில் உள்ள அனைத்து குடிமக்களுக்கும் வாக்களிக்கும் உரிமை வழங்கப்படும் வயது .........
   அ) 21 ஆ) 18 இ) 25 ஈ) 31
5. முதன்மைக் காரணிகள் என்பன ..........
   அ) நிலம், மூலதனம் ஆ) மூலதனம், உழைப்பு
   இ) நிலம், உழைப்பு ஈ) எதுவுமில்லை

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக. 5x1=5**

6. விக்கிரமசீலா பல்கலைக்கழகத்தை தோற்றுவித்தவர் ......... ஆவார்.
7. முகமது பின் துக்ளக் தனது தலைநகரை டெல்லியிலிருந்து ........ க்கு மாற்றினார்.
8. உலகின் மிக நீண்ட கடற்கரை ........ ஆகும்.
9. தேர்தலில் போட்டியிடும் உரிமை என்பது .........
10. ......... என்பது மனித உற்பத்தியில் ஓர் இடுபொருள்.

**III. பொருத்துக. 5x1=5**

| | | |
|---|---|---|
| 11. | மதுரா விஜயம் | - காயல் |
| 12. | சிமா | - மீன்பிடித்தல், சுரங்கத்தொழில் |
| 13. | வேம்பநாடு ஏரி | - சிலிக்கா மற்றும் மக்னீசியம் |
| 14. | பெரும்பான்மைக் காட்சி | - கங்காதேவி |
| 15. | முதன்மை உற்பத்தி | - அரசாங்கத்தை அமைப்பது |

**IV. சரியா / தவறா எனக் கூறுக. 5x1=5**

16. ‘ரக்ஷாபந்தன்’ சகோதர உறவு தொடர்பான விழாவாகும்.
17. கூடல்நகர் காவலன் என்பது பாண்டிய அரசரின் பட்டமாகும்.
18. சோழ அரசரின் மூத்த மகன் யுவராஜன் என அழைக்கப்பட்டார்.
19. பள்ளிச்சந்தம் என்பது சமண சமய நிறுவனங்களுக்குக் கொடையாக வழங்கப்பட்ட நிலமாகும்.
20. ரஸ்ஸியா திறமை மிக்க மனவலிமை கொண்ட போர்வீரர்.

**V. சரியான கூற்றை கண்டறி: 6x2=12**

21. **கூற்று** : பூமியின் உருவத்தை ஒரு ஆப்பிளோடு ஒப்பிடலாம்.
**காரணம்** : புவியின் உட்பகுதியானது மேலோடு, மெல்லிய புறத்தோல், புவிக்கருவம் ஆகியவற்றைக் கொண்டது.
அ) கூற்றும் காரணம் சரி, கூற்றை காரணம் சரியாக விளக்குகிறது.
ஆ) கூற்றும் காரணமும் சரி, ஆனால் கூற்றைக் காரணம் சரியாக விளக்கவில்லை.
இ) கூற்று சரி, காரணம் தவறு ஈ) கூற்றும் காரணமும் தவறானவை.

22. **பொருந்தாததைக் கண்டுபிடி.**
இமயமலை, ஆல்பஸ், ராக்கி, கங்கை

23. **சரியான இணையைத் தேர்வு செய்க.**
அ) ஹொய்சாளா - தேவகிரி
ஆ) யாதவர் - துவாரசமுத்திரம்
இ) காகதியர் - வாராங்கல்
ஈ) பல்லவர் - மதுரை

**VI. எவையேனும் 6 வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளி: 6x2=12**

24. வரலாற்றை அறிந்து கொள்வதற்கான இருவகைச் சான்றுகளைக் கூறுக.
25. சோழர்கள் காலத்தில் ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்கள் யாவை?
26. பிரோஷ் ஷா துக்ளக்கின் சாதனைகளைப் பட்டியலிடுக.
27. நிலநடுக்கம் - வரையறு.
28. காயல்கள் என்றால் என்ன? ஒரு உதாரணம் தருக.
29. மூன்று வகை கட்சி முறைகளைக் குறிப்பிடுக.
30. சமத்துவம் என்றால் என்ன?
31. உற்பத்தி என்றால் என்ன?
32. தொழில் முனைவோரின் பண்புகள் யாவை?

**VII. எவையேனும் 4 வினாக்களுக்கு மட்டும் விரிவான விடையளி: 4x5=20**

33. டெல்லி சுல்தான்கள் அறிமுகம் செய்த பல்வகைப்பட்ட நாணயங்களை விவரிக்கவும்.
34. சோழர்களின் ஆட்சித்திறம் பற்றிய ஐந்து முக்கிய அம்சங்களை விவரித்து எழுதவும்.
35. எரிமலை வெடிப்பின் அடிப்படையில் அதன் வகைகளை விளக்குக.
36. காற்றின் செயல்களால் ஏற்படும் நிலத்தோற்றங்களை விளக்குக.
37. சமத்துவத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி எழுதுக.
38. உற்பத்தியின் வகைகளை விரிவாக எழுதுக.

**VIII. இந்திய வரைபடத்தில் கீழ்க்கண்ட இடங்களைக் குறித்துக் காட்டுக: (ஏதேனும் 5 மட்டும்) 5x1=5**

39. 1. நாளந்தா 2. கன்னோஜ் 3. சௌகான்கள்
4. டெல்லி 5. மதுரை 6. லாகூர்
7. தேவகிரி 8. வங்காளவிரிகுடா

விழித்துக் கொண்டிருக்கும் நேரமெல்லாம்
படித்துக் கொண்டிரும்

## எமது வெளியீடுகள் (STATE BOARD)

6th to 12th Std - **STEP TO SUCCESS ENGLISH**

10th to 12th Std - **ELITE ENGLISH**

6th to 12th Std - **உன்னால் முடியும் தமிழ்**

10th to 12th Std - **அமுத சுரபி தமிழ்**

6th to 10th Std - **சமூகஅறிவியல்**
(Tamil & English Medium)

8th to 10th Std - **அறிவியல்**
(Tamil & English Medium)

**டால்பின் பப்ளிகேசன்ஸ்®**

239, கீழப்பட்டித்தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர் - 626 125, விருதுநகர் மாவட்டம், த.நா.

**Cell : 98653 06197 / 89256 77710 / 99435 67646**
**93453 14146 / 93453 30937**

Mail us : dolphin.pub2005@gmail.com Visit us : www.kalvidolphin.com

**63743 17883**

7

புதிய பதிப்பு

# டால்பின்®

உன்னால் முடியும்

## சமூக அறிவியல்

# வரைபடப் பயிற்சிப் புத்தகம்




டால்பின் பப்ளிகேசன்ஸ்®

# டால்பின்®

7

உன்னால் முடியும்

# சமூகஅறிவியல்

புதிய பதிப்பு

# வரைபடப் பயிற்சிப் புத்தகம்


98653 06197 | 89256 77710 | 99435 67646

டால்பின் பப்ளிகேசன்ஸ்®

தரமே எங்களின் தாரக மந்திரம்

239, கீழப்பட்டி தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர் - 626 125, விருதுநகர் மாவட்டம். த.நா.

Mail us : dolphin.pub2005@gmail.com | Visit us : www.kalvidolphin.in


© All Copyrights reserved

விலை : ரூ.27

# பாடப் பொருளடக்கம்

| பயிற்சி எண் | மாதம் | பொருளடக்கம் | மதிப்பெண் | ஆசிரியர் கையொப்பம் |
|---|---|---|---|---|
| **பருவம் – 1** | | | | |
| 1. | ஜீலை | வட இந்தியப் புதிய அரசுகளின் தோற்றம் | | |
| 2. | ஆகஸ்ட் & செப்டம்பர் | டெல்லி சுல்தானியம் | | |
| 3. | ஜீன் | புவியின் உள்ளமைப்பு | | |

பாட ஆசிரியர் கையொப்பம்

தலைமை ஆசிரியர் கையொப்பம்

| பயிற்சி எண் | மாதம் | பொருளடக்கம் | மதிப்பெண் | ஆசிரியர் கையொப்பம் |
|---|---|---|---|---|
| **பருவம் – 2** | | | | |
| 4. | அக்டோபர் | விஜயநகர், பாமினி அரசுகள் | | |
| 5. | நவம்பர் | முகலாயப் பேரரசு | | |
| 6. | நவம்பர் | முகலாயப் பேரரசு | | |
| 7. | நவம்பர் & டிசம்பர் | மராத்தியர்கள் மற்றும் பேஷ்வாக்களின் எழுச்சி | | |
| 8. | அக்டோபர் | வளங்கள் | | |

பாட ஆசிரியர் கையொப்பம்

தலைமை ஆசிரியர் கையொப்பம்

| பயிற்சி எண் | மாதம் | பொருளடக்கம் | மதிப்பெண் | ஆசிரியர் கையொப்பம் |
|---|---|---|---|---|
| **பருவம் - 3** | | | | |
| 9. | சனவரி | கண்டங்களை ஆராய்தல் -<br>வட அமெரிக்கா மற்றும் தென் அமெரிக்கா | | |
| 10. | சனவரி | கண்டங்களை ஆராய்தல் -<br>வட அமெரிக்கா மற்றும் தென் அமெரிக்கா | | |
| 11. | பிப்ரவரி | நில வரைபடத்தை கற்றறிதல் | | |

பாட ஆசிரியர் கையொப்பம்

தலைமை ஆசிரியர் கையொப்பம்

# வரலாறு

பருவம்-1


## 2. வட இந்தியப் புதிய அரசுகளின் தோற்றம்

**இந்திய ஆறுகள் வரைபடத்தில் பிரதிகாரர்கள், சௌகான்கள், பாலர்கள், பரமாரர்கள் ஆண்ட பகுதிகளைக் குறிப்பிடுக.**




## 2. வட இந்தியப் புதிய அரசுகளின் தோற்றம் பருவம்-1


**இந்திய ஆறுகள் வரைபடத்தில் பிரதிகாரர்கள், சௌகான்கள், பாலர்கள், பரமாரர்கள் ஆண்ட பகுதிகளைக் குறிப்பிடுக.**



# பயிற்சி வரைபடம்



## பயிற்சி வரைபடம்



விழித்துக் கொண்டிருக்கும் நேரமெல்லாம்
படித்துக் கொண்டிருப்போம்


## எமது வெளியீடுகள் (STATE BOARD)

6th to 12th Std - **STEP TO SUCCESS ENGLISH**

10th to 12th Std - **ELITE ENGLISH**

6th to 12th Std - **உன்னால் முடியும் தமிழ்**

10th to 12th Std - **அமுத சுரபி தமிழ்**

6th to 10th Std - **சமூகஅறிவியல்**
(Tamil & English Medium)

8th to 10th Std - **அறிவியல்**
(Tamil & English Medium)

**டால்பின் பப்ளிகேசன்ஸ்®**

239, கீழப்பட்டித்தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர் - 626 125, விருதுநகர் மாவட்டம், த.நா.

**Cell : 98653 06197 / 89256 77710 / 99435 67646**
**93453 14146 / 93453 30937**

Mail us : dolphin.pub2005@gmail.com | Visit us : www.kalvidolphin.com

G Pay **63743 17883**